

# சோனியா, ராகுல் ரூ.988 கோடி மோசடியா? நேஷனல் ஹெரால்டு வழக்கின் பரபரப்பு பின்னணி

## நாடு முழுவதும் போராட்டம் நடத்த காங்கிரஸ் தீவிரம்

**காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி இருவரும் தற்போது செயல்படாத நேஷனல் ஹெரால்டு பத்திரிகையின் வெளியீட்டு நிறுவனத்தை வாங்குவதற்கு காங்கிரஸ் கட்சி நிதியை தவறாக பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.**

இந்த முறைகேடு மூலம் அவர்கள் இருவரும் பல நூறு கோடி ரூபாய் ஆதாயம் அடைந்து விட்டதாக அமலாக்கத்துறை சொல்கிறது. ஆனால் தாங்கள் இருவரும் எவ்வித நிதி முறைகேடு களிலும் ஈடுபடவில்லை என சோனியா காந்தியும், ராகுல்காந்தியும் மறுத்துள்ளனர்.

இந்த விவகாரத்தின் பின்னணியை முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டுமானால் நேஷனல் ஹெரால்டு பத்திரிகை பற்றியும் அதன் தற்போதைய நிலை பற்றியும் தெரிந்து கொண்டதால்தான் விடை கிடைக்கும்.

நேஷனல் ஹெரால்டு பத்திரிகை ராகுல் காந்தியின் கொள்ளுத் தாத்தாவும் இந்தியாவின் முதல் பிரதமருமான ஜவஹர்லால் நேருவால் 1938–ம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1937–ம் ஆண்டில் நேருவால் தொடங்கப்பட்ட அசோசியேட்டட் ஜர்னல்ஸ் லிமிடெட் (ஏ.ஜே.எல்.) என்ற நிறுவனத்தின் சார்பில் இந்த பத்திரிகை வெளியிடப்பட்டு வந்தது.

ஏ.ஜே.எல். நிறுவனத்தில் 5,000–க்கும் மேற்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள் பங்குதாரர்களாக இருந்தனர். இந்த நிறுவனத்தின் மூலம் உருது மொழியில் குவாமி ஆவாஸ் என்ற பத்திரிகையும் இந்தி மொழியில் நவ்ஜீவன் என்ற தினசரி பத்திரிகையும் தொடங்கப்பட்டது.

அந்த காலத்தில் மிகவும் செல்வாக்குமிக்க தலைவர்களால் வடிவமைக்கப்பட்ட நேஷனல் ஹெரால்டு, இந்திய சுதந்திரப் போராட்டத்தால் அடையாளப்படுத் தப்பட்டது. இதன்மூலம் இந்தியாவின் சிறந்த தேசியவாத பத்திரிகை என்ற புகழை நேஷனல் ஹெரால்டு பத்திரிகை பெற்று இருந்தது.

நேஷனல் ஹெரால்டு பத்திரிகையின் கடுமையான மற்றும் கூர்மையான தலையங்கம் அந்த காலத்தில் மிகப்பெரிய வரவேற்பை பெற்று இருந்தது. மேலும் சுதந்திர போராட்ட செய்திகளின் பாணி மற்றும் நேருவின் கடும் வார்த்தைகளைக் கொண்ட வரிகள் காரணமாக, இங்கிலாந்து அரசாங்கம் அச்சம் அடைந்தது,



இதன் காரணமாக நேஷனல் ஹெரால்டு பத்திரிகையை 1942–ம் ஆண்டு இங்கிலாந்து அரசு தடை செய்தது. இதனால் அந்த தினசரி பத்திரிகை தற்காலிகமாக செயல்பட முடியாத நிலைமை ஏற்பட்டது. அதன்பின் மூன்று ஆண்டுகள் கழித்து மீண்டும் நேஷனல் ஹெரால்டு பத்திரிகை செயல்படத் தொடங்கியது.

1947–ம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்று, நாட்டின் பிரதமராக நேரு பதவியேற்ற பின்னர், நேஷனல் ஹெரால்டு பத்திரிகையின் இயக்குனர் குழு தலைவர் பொறுப்பை அவர் ராஜினாமா செய்தார்.

ஆனால் அப்பத்திரிகையின் கொள்கையை வடிவமைப்பதில் பெரும் பங்கு வகிப்பதில் காங்கிரஸ் தொடர்ந்து செயலாற்றி வந்தது. 1963–ம் ஆண்டு நேஷனல் ஹெரால்டு பத்திரிகையின் 25–ம் ஆண்டு வெள்ளி விழா கொண்டாடப்பட்டது.

அப்போது நேஷனல் ஹெரால்டு பத்திரிகை குறித்து ஜவஹர்லால் நேரு பேசுகையில், "பொதுவாக காங்கிரஸ் கொள்கையை ஆதரிக்கும் அதேவேளையில் சுயாதீனமான கண்ணோட்டத்தை நேஷனல் ஹெரால்டு பேணுகிறது'' என்று பேசினார்.

காங்கிரஸ் கட்சியின் நிதியின் மூலமாக செயல்பட்ட போதும், இந்தியாவின் சிறந்த பத்திரிகையாளர்களின் அரவணைப்பின் மூலம், முன்னணி ஆங்கில செய்தித்தாளாக உருவெடுத்தது.

ஆனால், 2008–ம் ஆண்டு பொருளாதார நெருக்கடி காரணங்களுக்காக மீண்டும் நேஷனல் ஹெரால்டு பத்திரிகை நிறுத்தப்பட்டது. 2016–ம் ஆண்டு நேஷனல் ஹெரால்டு பத்திரிகை அச்சு பதிப்பில் இருந்து இணைய பதிப்பாக மீண்டும் தொடங்கப்பட்டது.

முன்னதாக, 2010–ம் ஆண்டு அந்த நிறுவனத்தின் பங்கு தாரர்களின் எண்ணிக்கை 1,057–ஆக குறைக்கப்பட்டது.

கடந்த 2012–ம் ஆண்டு பா.ஜ.க. மூத்த தலைவரான சுப்ரமணியன் சாமி, நேஷ னல் ஹெரால்டு பத்திரிகை யின் சொத்துகள் சட்ட விரோதமாக கைப்பற்றப்பட்டதாக பரபரப்பு புகாரை வெளியிட்டார். அதோடு அவர் டெல்லியில் உள்ள விசாரணை நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

அதில், 2008–ம் ஆண்டு நேஷனல் ஹெரால்டு பத்திரிகை மூடப்பட்டபோது, அந்த நிறுவனத்திற்கு காங்கிரசில் 90 கோடி ரூபாய் கடன் நிலுவை இருந்ததாகவும், பின்னர் 2010–ம் ஆண்டு காங்கிரஸ் கட்சி இந்த கடனை யங் இந்தியா லிமி டெட் என்ற நிறுவனத்திடன் வழங்கியதாகவும் சுப்ரமணியன் சுவாமி அம்மனுவில் கூறியிருந்தார்.

வருமான வரிச் சட்டத்தின் கீழ் எந்த அரசியல் அமைப்பும், மூன்றாம் தரப்பினருடன் நிதி பரிவர்த்தனை செய்ய முடியாது எனக் கூறியிருந்த சுப்ரமணியன் சுவாமி, வெறும் ரூ.50 லட்சம் ரூபாய் மட்டும் திருப்பிச் செலுத்தி, யங் நிறுவனம் முறைகேடாக அந்த நிறுவனத்தையும், அதற்குச் சொந்தமான ரூ.2,000 கோடி ரூபாய் சொத்துகளைக் கைப்பற்றிய தாக சுப்ரமணியன் சுவாமி குற்றம் சாட்டியுள்ளார்.

யங் இந்தியா நிறுவ னத்தில் சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி ஆகியோர் தலா 38 சதவீதம் பங்குகளை வைத்துள்ளனர். மீதமுள்ள 24 சதவீதம் பங்கு காங்கிரஸ் தலைவர்கள் மோதிலால் வோரா மற்றும் ஆஸ்கார் பெர்னாண்டஸ், பத்திரிகையாளர் சுமன் துபே ஆகியோரிடம் உள்ளன.

இந்த நிறுவனம் முற்றிலும் அறக்கட்டளை யாக தொடங்கப்பட்டது என்று கூறி, நேஷனல் ஹெரால்டு வழக்கில் முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை காங்கிரஸ் கட்சி மறுத்து வருகிறது.

இவ்வழக்கில் ஜூன் 2014–ம் ஆண்டு ராகுல் காந்தி, சோனியா காந்தி உட்பட இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனை வருக்கும் டெல்லி நீதிமன்றம் சம்மன் அனுப்பியது. 2015–ம் ஆண்டு இவ்வழக்கில் சோனியா காந்தி, ராகுல் காந்தி இருவருக்கும் ஜாமீன் வழங்கப்பட்டது. மேலும், இந்த வழக்கில் ராகுல் காந்தி, சோனியா காந்திக்கு எதிரான நடவடிக்கைகளை ரத்து செய்ய சுப்ரீம் கோர்ட்டு மறுப்பு தெரிவித்தது.

பின்னர் 2019–ம் ஆண்டு நேஷனல் ஹெரால்டுக்கு சொந்தமான சுமார் 16 கோடி ரூபாய் மதிப்புடைய சொத்துகளை அமலாக்கத் துறை பறிமுதல் செய்தது. கடந்த சில ஆண்டுகளாக இவ்வழக்கில் பெரிதும் எந்த முன்னேற்றமும் இல்லாமல் இருந்தது.

இந்த நிலையில் நேஷனல் ஹெரால்ட் பத்திரிகை வழக்கின் பண முறைகேடு குற்றச்சாட்டுகளின் கீழ், காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, அவரின் மகனும் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி உள்ளிட்டோருக்கு எதிராக அமலாக்கத் துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

டெல்லியில் எம்.பி., எம்.எல்.ஏ.க்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் சோனியா, ராகுலுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அதில் காங்கிரஸ் பிரமுகர் சாம் பிட்ரோடா, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் ஊடக ஆலோசகர் சுமன் துபே உள்ளிட்டோரின் பெயர்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

குற்றப்பத்திரிகையில் சோனியா, ராகுல் உள்ளிட்டோர் ரூ.988 கோடிக்கு பண முறை கேட்டில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட அந்தக் குற்றப் பத்திரிகையை சிறப்பு நீதிபதி விஷால் கோக்னே ஆராய்ந்தார். இதையடுத்து, வழக்கின் அடுத்தகட்ட விசாரணையை வருகிற 25–ந்தேதிக்கு அவர் ஒத்தி வைத்துள்ளார். அன்றைய தினம் நீதிமன்ற ஆய்வுக்காக அமலாக்கத் துறையின் விசாரணை விவரங்கள் அடங்கிய குறிப்பேடு சமர்ப்பிக் கப்படுவதை, அந்தத் துறை சார்பாக ஆஜராகும் சிறப்பு வக்கீல் உறுதி செய்ய வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதன் காரணமாக நேஷனல் ஹெரால்டு பத்திரிகை வழக்கில் சோனியா, ராகுல் மீது பிடி இறுகுவதாக கூறப்படுகிறது. இந்த வழக்கு மூலம் அவர்களது அரசியல் செல்வாக்கு பாதாளத்துக்கு செல்லும் என்றும் காங்கிரசார் பயப்படுகிறார்கள்.

இதனால் நேஷனல் ஹெரால்டு பத்திரிகை வழக்கு மூலம் சோனியாவையும், ராகுலையும் பாரதீய ஜனதா அரசு பழிவாங்குவதாக காங்கிரஸ் தலைவர்கள் கடந்த சில தினங்களாக சொல்லி வருகிறார்கள். மத்திய அரசு இந்த விசயத்தில் மிகப்பெரிய நடவடிக்கை எடுக்கும் முன்பு தாங்கள் மிகப்பெரிய அதிரடியை தொடங்க காங்கிரஸ் தலைவர்கள் நினைக்கிறார்கள்.

இதற்காக நாளை (சனிக்கிழமை) டெல்லியில் காங்கிரஸ் தலைவர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் நாடு முழுவதும் போராட்டம் நடத்த முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

### சைவம், வைணவம் பற்றி ஆபாச பேச்சு

# அமைச்சர் பொன்முடி மீது வழக்குப்பதிவு செய்ய சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை

## ஐகோர்ட்டு உத்தரவால் போலீஸ் நடவடிக்கை

சென்னை, ஏப்.18—

அமைச்சர் பொன்முடி சைவம், வைணவம் பற்றி ஆபாசமாக கருத்து தெரி வித்தது பெரும் சர்ச்சையாகி உள்ளது.

இது தொடர்பாக சென்னை ஐகோர்ட்டில் நடந்த விசாரணையில் பின் விளைவு என்ன என்று தெரிந்தே பொன்முடி இவ் வாறு பேசி இருக்கிறார். ஊழலை எப்படி சகித்துக் கொள்ள முடியாதோ அதே போல் வெறுப்பு பேச்சை யும் சகிக்க முடியாது. எனவே போலீசார் தாமாக முன் வந்து பொன்முடி மீது ஒரு வழக்குப்பதிவு செய்து புலன் விசாரணை நடத்தி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும் என்று கோர்ட்டு உத்தரவிட்டது.

**ஆலோசனை**

கோர்ட்டு உத்தரவை அடுத்து பொன்முடி மீது வழக்கு தொடர்வது பற்றி போலீசார் சட்ட நிபுணர் களுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்கள்.

அமைச்சர் பொன்முடி தி.மு.க. இளைஞர் அணியின் தலைமை அலுவலகமான அன்பகத்தில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் நடத்தப்பட்ட கூட்டத்தில் தான் சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டு உள்ளார்.

அரங்கம் அமைந்துள்ள பகுதி தேனாம்பேட்டை பகுதியில் உள்ளது. எனவே தேனாம்பேட்டை போலீசில் வழக்கு பதிவதா? அல்லது சைபர் கிரைம் போலீசில் வழக்கு பதிவதா? என்றும் ஆலோசித்து வருகிறார்கள்.

இதுபோன்ற கூட்டங் களை பொதுவெளியில் இந்த மாதிரி அமைப்புகளால் நடத்த முடிவதில்லை. காரணம் கடவுளை எதிர்த் தும், உணர்வுகளை கொச் சைப்படுத்தியும் பேசுவதால் பொதுமக்களிடையே கடும் எதிர்ப்பு கிளம்புகிறது.

எனவே போலீசாரும் பொது வெளியில் நடத்த அனுமதிப்பதில்லை. எனவே சமீபகாலமாக இவ்வாறு அரங்கங்களில் கூட்டம் நடத்துவது குறிப் பிடத்தக்கது.

**சலுகை ரத்தாகுமா?**

ஏற்கனவே பொன்முடி ஒரு வழக்கில் தண்டிக்கப் பட்டவர். அந்த தண்ட னையை சுப்ரீம் கோட்டு நிறுத்தி வைத்துள்ளது. அதை தவறாக பயன்படுத் தும் வகையில் பொன்முடி மீண்டும் இவ்வாறு பேசி இருக்கிறார்.

இந்த விவகாரத்துக்காக அவருக்கு வழங்கப்பட்ட சலுகையை ரத்து செய்ய சுப்ரீம் கோர்ட்டை நாடலாம் என்றும் ஐகோர்ட்டு சுட்டிக் காட்டி உள்ளது. எனவே அவருக்கு சுப்ரீம் கோர்ட்டு வழங்கியிருக்கும் சலுகை ரத்தாகலாம் என்றும் பேசப் படுகிறது.

---

### நெல்லை அரசு மருத்துவமனையில்

# கர்ப்பிணிகள் வார்டில் நோயாளிகள் இருக்கும் போது தூசி அகற்றம்

## உரிய நடவடிக்கை எடுப்பதாக டீன் தகவல்

நெல்லை, ஏப்.18—

நெல்லை அரசு மருத்துவ மனையில் உள்ள பிரசவ வார்டில் நூற்றுக்கும் மேற்பட்ட கர்ப்பிணிகள் தினமும் சிகிச்சைக்காக அனுமதிக்கப் படுகிறார்கள். இந்த மருத்துவமனையில் கர்ப்பிணி பெண்களுக்கு அறுவை சிகிச்சைக்கு பிறகு தங்க வைக்கும் வார்டு உள்ளது.

இந்த வார்டில் 5—க்கும் மேற்பட்ட கர்ப்பிணிகள் ஓய்வில் இருந்த போது அங்கு வந்த தூய்மை பணி யாளர் நோயாளி களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் தூய்மை பணியை மேற்கொண்டுள்ளார்.

இது குறித்த வீடியோ காட்சிகள் தற்போது சமூக வலைதளங்களில் இன்று வேகமாக பரவி வருகிறது.

இதுகுறித்து அரசு மருத்துவமனை முதல்வர் ரேவதி பாலன் கூறுகையில், நோயாளிகள் இருக்கும் போது தூய்மை பணி மேற்கொண்டு இருக்கக் கூடாது. தற்போது தான் வீடியோ காட்சிகள் எங்களுக்கு கிடைத்துள்ளது.

இது தொடர்பாக குழு அமைத்து விசாரணை நடத்தி வருகிறோம். விசார ணைக்கு பிறகு தவறு செய்த ஊழியர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

---

### பாளையங்கோட்டையில்

# கல்லறை தோட்டம் பகுதியில் கிணற்றில் மிதந்த ஆண் சடலம்

நெல்லை, ஏப்.18—

பாளையங்கோட்டை பெருமாள்புரத்தை அடுத்த டக்கரம்மாள்புரம் அருகே கல்லறை தோட்டம் உள்ளது.

இதன் அருகில் உள்ள ஒரு கிணற்றில் இன்று காலை ஆண் உடல் ஒன்று கிடப்பதாக பெருமாள்புரம் போலீசாருக்கு தகவல் கிடைத்தது. தகவல் அறிந்து அங்கு விரைந்து சென்ற போலீசார், தீயணைப்பு வீரர்கள் உதவியுடன் பிணமாக கிடந்தவர் உடலை மீட்டனர். சுமார் 40 வயது மதிக்கத்தக்க அவரது சட்டை பையில் பூஜையில் வைக்கப்படும் செப்பு தகடு ஒன்று மட்டும் இருந்துள்ளது. இவர் இரவில் அந்த வழியாக வந்த போது தவறி விழுந்து இறந்தாரா? அல்லது வேறு ஏதும் காரணம் உண்டா? என்பது குறித்து பெருமாள்புரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து அவர் யார்? எந்த ஊர் என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

---

### புளியங்குடியில் நள்ளிரவில்

# டாஸ்மாக் கடையை உடைத்து மது பாட்டில்கள் கொள்ளை

நெல்லை, ஏப்.18—

தென்காசி மாவட்டம் புளியங்குடி நவாசாலை பகுதியில் அரசு மதுபானக்கடை இயங்கி வருகிறது. இந்த கடையில் நேற்று இரவு விற்பனை முடிந்ததும் கடை ஊழியர்கள் கடையை பூட்டிவிட்டு சென்றனர்.

இன்று அதிகாலை 2 மணி அளவில் புளியங்குடி போலீசார் அந்த வழியாக ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். அப்போது டாஸ்மாக் கடை பகுதியில் ரோந்து சென்றபோது கடையின் பூட்டு உடைக்கப்பட்டி ருந்தது.

உடனே போலீசார் அங்கு சென்று பார்த்த போது கடையில் இருந்து மதுபாட்டில்களை மர்ம நபர்கள் கொள்ளை யடித்தது தெரியவந்தது. இதில் சுமார் 90 மது பாட்டிகள் திருட்டு போயிருந்தது.

மேலும் மர்ம நபர்கள் கடையின் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த சி.சி. டி.வி. காமிராக்களை அடித்து உடைத்து சேதப்படுத்தி சென்றது விசாரணையில் தெரியவந்தது.

இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து திருட்டில் ஈடுபட்ட மர்ம நபர்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

---



சட்டக் கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை ஐகோர்ட்டு நீதிபதியும், மாநில சட்டப்பணிகள் ஆணையக் குழுவின் உறுப்பினருமான நீதிபதி எம்.தண்டபாணி, சட்ட விழிப்புணர்வு குறித்து உரையாற்றினார். இதில் மாவட்ட கலெக்டர் சுகுமார், மாவட்ட முதன்மை நீதிபதி எம்.சாய்சரவணன், மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹதிமணி, மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சிலம்பரசன் மற்றும் நீதிபதிகள், வக்கீல்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### நெல்லையில் சட்ட விழிப்புணர்வு முகாம்:

# பொதுமக்கள் எந்த பிரச்சினையாக இருந்தாலும் சட்டத்தின் மூலம் தீர்வு காணலாம்

## சென்னை ஐகோர்ட்டு நீதிபதி பேச்சு

நெல்லை, ஏப்.18—

நெல்லை மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு சார்பில் மரக்கன்று நடுதல் மற்றும் சட்ட விழிப்புணர்வு முகாம் அரசு சட்டக் கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில், சென்னை ஐகோர்ட்டு நீதிபதி தண்டபாணி முகாமை தொடங்கி வைத்து பேசினார்.

நெல்லை மாவட்ட முதன்மை நீதிபதி சாய் சரவணன் வரவேற்று பேசினார். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் சென்னை வக்கீல் சந்திரசேகர் பேசினார்.

இதில் நெல்லை மாவட்ட கலெக்டர் சுகுமார், மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹதிமணி, மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சிலம்பரசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசினர். பின்னர் ஐகோர்ட்டு நீதிபதி தண்டபாணி பேசியதாவது:—

பரிணாம வளர்ச்சியில் நமக்கு முன் தோன்றியது மரங்கள்தான். அதன் பிறகு தான் நாம் தோன்றினோம். நாம் மரங்களுக்கு கார்பன் டை ஆக்ஸைடு என்ற தீமையை வழங்குகிறோம். ஆனால் மரங்கள் ஆக்ஸிஜன் என்ற நன்மையைத் தருகிறது.

நம் நாட்டில் உள்நாட்டு மரங்களை வளர்க்க வேண்டும். நீதிபதிகளுக்கும், மரங்களுக்கும் என்ன சம்பந்தம் என கேட்கலாம். நீதிபதிகளுக்கு சட்டம் இயற்றுவது மட்டும் வேலை அல்ல. நீதி சாதாரண மக்களையும் சென்றடை கிறதா என பார்ப்பதும் நீதிபதிகளின் கடமைதான்.

ஒவ்வொருவருக்கும் ஒரு பிரச்சினை இருக்கும். கலெக்டர் அலுவலகத்தில், போலீஸ் நிலையத்தில் பிரச்சினை இருக்கலாம். அதை பொதுமக்கள் சட்டப் பணி ஆணைக்குழுவை சந்தித்து தீர்வு காணலாம்.

பாராளுமன்ற தாக்குதலில் ஈடுபட்ட அஜ்மல் கசாப்புக்கு ஆதரவாக வக்கீல் நியமித்த நாடு நம் நாடு. அந்த அள விற்கு இந்தியா மிகப்பெரிய ஜனநாயக நாடு. உலகில் வேறு எங்கும் இதுபோன்று நடக்கவில்லை. அதனால் பொதுமக்கள் எந்த பிரச்சினையாக இருந்தாலும் சட்டத்தின் மூலம் தீர்வு காணலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

---

# விஜய் தலைமையில்... 

(3-ம் பக்க தொடர்ச்சி)

மொத்தம் 35 ஆயிரம் பூத் கமிட்டி அமைக்கப்பட்டது. மொத்தம் 70 ஆயிரம் கமிட்டி உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ள னர்.

இந்த பணிகள் முடி வடைந்த நிலையில் தமிழக வெற்றிக் கழக பூத் கமிட்டி மாநாடு வருகிற 26, 27—ந் தேதிகளில் கோவை சரவணம்பட்டியில் நடைபெற இருக்கிறது.

மாநாட்டில் கொங்கு மண்டலத்துக்குட்பட்ட கோவை, சேலம், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், நீலகிரி மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

**விஜய் பங்கேற்பு**

26—ந்தேதி மதியம் 3 மணிக்கு மாநாடு தொடங்கு கிறது. 2 நாட்கள் நடைபெ றும் மாநாட்டில் கட்சி தலைவர் விஜய் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

மாநாட்டில் தேர்தல் பணிகள், மக்களிடையே தமிழக வெற்றிக் கழக திட்டங்களை கொண்டு செல்வது மற்றும் 234 தொகுதிகளிலும் வெற்றி பெறுவதற்கான வியூகங்கள் பற்றி விஜய் ஆலோசனை நடத்த இருக்கிறார்.

இந்த மாநாட்டில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய்யின் அதிரடி அரசியல் பேச்சு அரசியல் கட்சிகள் மத்தியிலும், தொண்டர்கள் மத்தியிலும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

மாநாடு நடைபெறும் இடத்தை சமீபத்தில் கட்சி பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் நேரில் சென்று பார்வையிட்டார். தொடர்ந்து மாநாட்டுக்கான முன் ஏற்பாட்டு பணிகளில் கோவை மாவட்ட நிர்வா கிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

---


தமிழ்நாடு அரசு **இந்து சமய அறநிலையத்துறை**

**அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,** பழநி.

**விலைப்புள்ளி அறிவிப்பு எண். 4439/2022/எப்2, நாள்:12.04.2025.**

இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி அவர்களால் **பொருட்கள் கம்பி வட ஊர்தி வடிவமைத்தல் நிறுவுதல், இயக்குதல்** மற்றும் **பராமரித்தல்** ஆகியவற்றில் தகுதி மற்றும் முன் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்திருக்கோயிலில் இயங்கிவரும் **பொருட்கள் கம்பிவட ஊர்தி மூன்று வருடகால இயக்கம்** மற்றும் **பராமரிப்பு பணிக்கு** மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. மேலும், மேற்காணும் பணிக்கான தொழில்நுட்ப விவரக்குறிப்புகள் (Technical Specification) **www.palanimurugan.hrce.tn.gov.in** அல்லது **www.hrce.tn.gov.in** வலைத்தளத்திலிருந்து **15.04.2025** முதல் **28.04.2025** வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேற்கண்ட பணிக்கான மூடி முத்திரையிட்ட விலைப்புள்ளிகள் **29.04.2025 மாலை 03.00** மணிக்குள் இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்பணி குறித்தும் இதர விவரங்கள் குறித்தும் இத்திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

செ.ம.தொ.இ./1607/ஒப்பந்தப்புள்ளி/2025

**இணை ஆணையர் / செயல் அலுவலர்**



**VTM லிமிடெட்**

CIN L17111TN1946PLC003270

பதிவு அலுவலகம்: சூலக்கரை, விருதுநகர், ராமநாதபுரம் மாவட்டம், தமிழ்நாடு — 626003

இணையதளம்: www.vtmill.com | மின்னஞ்சல்: complianceofficer@vtmill.com | தொலைபேசி: +91 452 2482595

**அனைக்குழு கூட்ட முடிவுகள் — 16 ஏப்ரல் 2025**

**SEBI (LODR)** விதிகள், 2015ன் விதி 30 மற்றும் இந்திய நிறுவனச் சட்டம், 2013ன் பிரிவுகள் 13, 14, 61, 63, 102 மற்றும் 110 மற்றும் அதனுடன் தொடர்புடைய விதிகளுக்கும் **SS-2** வினையும் பொருந்தும் வகையில், 16 ஏப்ரல் 2025 அன்று நடைபெற்ற **VTM Limited** நிறுவனத்தின் இயக்குனர் குழு கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன:

**1. நிறுவன விதிகளில் திருத்தம்: 2013 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் பிரிவு 14ன் கீழ், லாபங்களை மூலதனமாக மாற்றும் விதியை (Capitalisation of Profits) நிறுவன விதிகளில் சேர்க்க ஒப்புதல் வழங்கப்பட்டது, இது போனஸ் பங்குகள் வழங்கலுக்கு தேவையானது.**

**2. போனஸ் பங்குகள் வழங்கல்: நிறுவனச் சட்டத்தின் பிரிவு 63 மற்றும் SEBI (ICDR) விதிகளின் படி, ₹1 மதிப்புடைய பங்குகளை 3:2 விகிதத்தில் (தற்போதைய 2 பங்குகளுக்கு 3 புதிய பங்குகள்) இலவசமாக வழங்க, நிறுவனத்தின் இலவச நிதிகளை மூலதனமாக மாற்றும் தீர்மானம் ஏற்கப்பட்டது. பங்குகள் முழுமையாக நிகரமயமாக வழங்கப்படும்.**

**3. அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்தில் உயர்வு: பிரிவுகள் 13 மற்றும் 61ன் கீழ், ₹10 கோடியிலிருந்து ₹11 கோடியாக பங்கு மூலதனத்தை உயர்த்தி, நினைவுக் கடிதம் மற்றும் நிறுவன விதிகளில் பொருந்தக்கூடிய மாற்றங்கள் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**4. தபால் வாக்களிப்பு அறிவிப்பு ஒப்புதல்: பிரிவுகள் 102 மற்றும் 110ன் கீழ், பங்குதாரர்களின் ஒப்புதலை மின்னணு வாக்களிப்பின் வாயிலாக பெற, தபால் வாக்களிப்பு அறிவிப்பின் வரைவு ஒப்புதல் பெறப்பட்டது.**

மேலுள்ள விவரங்கள் மற்றும் தபால் வாக்களிப்பு அறிவிப்பு **www.vtmill.com** இணையதளத்தில் மற்றும் பங்குச் சந்தைகளில் விரைவில் வெளியிடப்படும். இந்த அறிவிப்பு **SEBI (LODR)** விதிகள் 2015ன் விதி 30 மற்றும் இந்திய நிறுவனச் சட்டம், 2013ன் பிரிவுகள் மற்றும் **SS-2** மற்றும் நிர்வாக விதிகளுக்கு ஏற்ப வழங்கப்படுகிறது.

VTM லிமிடெட்டிற்காக,

**கா.பிரியதர்ஷினி**

நிறுவன செயலாளர் & இணக்க அதிகாரி

நாள்: ஏப்ரல் 17, 2025

இடம்: மதுரை